ॐ

ஓம்

ஸ்ரீ குருப்யோ நம:

# ஸ்ரீ ஸ்வாமீ சித்பவாநந்த ஆச்ரமம்

## வேதாந்த சாஸ்த்ர ப்ரசார ட்ரஸ்ட்

(பதிவு எண்: 226 / 1992)




சத்திரப்பட்டி சாலை,
வேதபுரீ, தேனி. - 625 531






ஓம்

ஸ்ரீ குருப்யோ நம:

# உள்ளம் தோறும் வள்ளுவம்

## வள்ளுவம் வழங்கும் வாழ்வியல்
## ஸனாதன நெறியில் வள்ளுவம்

## அறத்துப்பால்

# ஸ்ரீஸ்வாமீ பூர்ணாநந்தர்

**பூஜ்யஸ்ரீ ஓங்காராநந்த மஹாஸ்வாமிகளின் சீடர்**



நாள் :
7, கார்த்திகை 2025

Date:
23, November 2025

www.vedaneri.org

வகுப்பு 12

அதிகாரம் : 8

# இல்லறவியல்

## அன்புடைமை



### அன்புடையவனாக இருத்தல்



இல்லறம் இனிது நடத்தல் அன்பின் பயனாதலால் அன்புடைமை அவசியமாகிறது.

குறள் : 1

அன்பின் இருப்பு

குறள்கள் : 2 - 6

அன்பினது சிறப்பு

2. தியாகம்

3. அன்பிற்காகவே மனிதப்பிறவி

4. அனைவரையும் நண்பராக்கும்

5. மறுமையிலும் இன்பம் தரும்

6. பகைமை மாற்றும்

குறள்கள் : 7 - 10


அன்பில்லாதவிடத்தில் உண்டாகும் குற்றம்

7. துன்பம் வரும்

8. இன்பம் இல்லை

9. அறம் இல்லை

10. பிறவியே வீணானது



# 1. அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்
# புன்கணீர் பூசல் தரும்.

(தம் அன்புக்குரியவரது துன்பத்தைக் காணும் பொழுது) அன்புடையவரது கண்களிலிருந்து வெளிப்படும் கண்ணீரே உள்ளேயிருக்கும் அன்பை வெளிப்படுத்தும். ஆதலால், அன்பிற்கும் (பிறரறியாமல்) அடைத்துவைக்கும் தாழ் உள்ளதா? (இல்லை).

தாழ் - தாழ்ப்பாள்
புன்கணீர் - புல்லிய கண்ணீர்
பூசல் தரும் - தூற்றும் - வெளிப்படுத்தும்

உள்ள உணர்வாக உள்ள அன்பு காட்சியளவைக்கு (ப்ரத்யக்ஷ ப்ரமாணத்திற்கு) புலப்படாததால் கருதல் அளவையால் (அனுமான ப்ரமாணத்தால்) காட்டப்பட்டது.

அன்புக்குரிய பிறர் மகிழுமாறு பொருளைக் கொடுப்பதும் அவர் துன்பத்தில் பங்கெடுப்பதும் அன்பின் வெளிப்பாடு ஆகும்.

இதனால் அன்பின் இருப்பு காட்டப்பட்டது.

## 2. அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரிய பிறர்க்கு.

உள்ளத்திலே அன்பில்லாதவர் (பிறருக்குக் கொடாமல்) எல்லாப்பொருட்களும் தமக்கே என்றிருப்பர். அன்புடையவர் தம் உடலையும் பிறருக்குக் கொடுக்கத் தயாராக இருப்பர்.

என்பு = எலும்பு - உடம்பு - சினையாகுபெயர்.

இந்திரனுக்கு ததீசி முனிவர் முதுகெலும்பைக் கொடுத்தது, சிபிசக்ரவர்த்தி புறாவிற்காக துலா ஏறியது போன்ற உதாரணங்கள் ஆகும்.

அன்புடையவர் தன் உயிரையும் கொடுக்கத் தயாராக இருப்பர்.



# 3. அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு என்போடு இயைந்த தொடர்பு.

பெறுதற்கரிய மனிதவுடலை எடுத்திருக்கின்ற ஜீவர்களுக்கு இவ்வுடலோடு ஏற்பட்டுள்ள தொடர்பானது அன்போடு கூடி வாழ்வதற்காக வந்த புண்ணிய பலனாகும்.

மனிதப் பிறப்பினது அருமை உயிர்களின் மேல் ஏற்றப்பட்டது.

வழக்கு = நீதி - முறைமை - புண்ணிய பாப ஒழுங்கு.

உடம்போடு கூடி அல்லாமல் அன்பு செய்ய முடியாமையால் அவ்வன்பு செய்வதற்காக இப்பிறப்பு உண்டாயிற்று என்பதாகும். ஆகவே, இடைவிடாமல் வரும் உயிர் - உடல் தொடர்பில் கிடைத்தற்கரிய இம்மனிதப் பிறவிக்குப் பயன் அன்புடைமை என்று கூறப்பட்டது.



அன்பு பின்னால் அருளாகும், அருள் முக்திக்கு ஸாதனமாகும். முக்தியே பிறவியின் இலக்கு ஆதலால் அன்புக்காகவே மனிதப்பிறவி.

# 4. அன்பீனும் ஆர்வ முடைமை அதுஈனும்
# நண்பென்னும் நாடாச் சிறப்பு.

(ஒருவனுக்கு ஸம்பந்தமுடையவரிடத்து இருக்கும்) அன்பானது பிறரிடத்தும் விருப்பமுடைமையை உண்டு பண்ணும். (அனைவரிடத்தும் வெளிப்படும்) அந்த அன்பானது (இவருக்கு யாவரும்) நண்பர் என்று சொல்லும் மேலான சிறப்பினை உண்டாக்கும்.

ஆர்வமுடைமை = விருப்பமுடைமை - அன்புடைமை

நாடாச் சிறப்பு - எல்லையற்ற சிறப்பு. எல்லாரும் நண்பராயிருந்தால் எல்லாப் பொருட்களையும் அடைய முடியும் என்பதால் நாடாச் சிறப்பு என்றார்.

அன்பு ஒருவருடத்தில் இயல்பாக இருக்குமானால் அது வாஸனையுள்ள மலர் போல எவ்விடத்தும் ஸமமாக இருக்கும். அதனால் அனைவராலும் விரும்பப்படும்.



# 5. அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்து
# இன்புற்றார் எய்தும் சிறப்பு.


உலகத்தில் மகிழ்ச்சியாக வாழ்ந்து (தானதர்மங்கள் செய்து) பின்னர் மேலுக இன்பத்தை அடைதல் என்பது அன்பும் அறனும் கொண்டு வாழ்ந்த இல்வாழ்க்கையின் பயன் என்று சொல்லுவர் அறிஞர்.

வையகம் = உலகம்

வழக்கு = நெறியின் பயன்

சிறப்பு = பேரின்பம், மேலுலக இன்பம்.

மேலுலக இன்பம் மிகுதியான புண்ணியத்தினால் வருவது.
தானம் முதலான புண்ணிய கார்யங்களைச் செய்வதற்கு அன்பு முக்கியமானதாக இருப்பதால் அது மறுமை இன்பத்துக்கும் ஸாதனமாக இருக்கிறது.



# 6. அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
# மறத்திற்கும் அஃதே துணை.



அறியாத சிலர் அன்பானது தர்மத்திற்கே துணையானது என்று சொல்லுவர். (ஒருவன் தீமை செய்தபோது அவன் மேல் வரும்) சினத்தை நீக்குவதற்கும் அன்பே துணையாகும்.

மறம் = சினம்.
கோபம் நீடித்து நிற்கின்றது சினம் - நச்சினார்க்கினியர்.

பிறர் செய்த குற்றங்களை மறப்பதற்கும் மன்னிப்பதற்கும் அன்புடைமை துணையாய் இருக்கிறது.


இவை ஐந்து பாட்டாலும் அன்பினது சிறப்புக் கூறப்பட்டது.

## 7. என்பி லதனை வெயில்போல் காயுமே
## அன்பி லதனை அறம்.

எலும்பில்லாத (புழு முதலியவற்றின்) உடலை வெயில் வாட்டுவது போல, அன்பில்லாத உயிரை அறக்கடவுள் துன்புறுத்தும்.

அகத்தில் அன்பில்லாத மனிதன் அறத்தைச் செய்யத் தவறுகிறான் அல்லது அறமல்லாதவற்றைச் செய்கிறான், அதனால் வரும் பாபத்தை அனுபவிக்கிறான்.

அல்லவை செய்தார்க்கு அறம் கூற்றாகும் - நான்மணிக்கடிகை



8. அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று.

மனதில் அன்பில்லாத மனிதனுடைய இல்வாழ்க்கையானது கொடிய பாலைநிலத்தில் காய்ந்துபோன மரம் தளிர்ப்பது போல் (நடவாதது) ஆகும்.

இன்பம் இல்லை.

அன்பில்லாத இல்வாழ்க்கை இன்பம் இல்லாததாகும். இன்பம் இல்லாத வாழ்க்கை பயனற்றதாகும்.



# 9. புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை
# அகத்துறுப்பு அன்பி லவர்க்கு.

உடலின் உள்ளுறுப்பாகிய அன்பு இல்லாதவர்களுக்கு புறத்தில் (உறுப்புகள் போல) இருக்கும் வாழ்க்கை வஸதிகள் என்ன பயனைத் தரும் ?

இல்வாழ்க்கையின் பண்பு அன்பு எனப்பட்டது. குடும்ப வாழ்க்கையில் ஒருவருக்கொருவர் அன்பு இல்லையென்றால் மனவமைதி இருக்காது. மனவமைதி இல்லாமல் ஒருவனால் அறத்தைச் செய்ய இயலாது. இவ்வாழ்க்கையின் பயனாகிய புண்யகார்யங்களைச் செய்ய முடியவில்லையென்றால் அவ்வாழ்க்கை வீணானது.

அன்பில்லாமல் அறச்செயல்கள் இல்லை. அறச்செயல்கள் இல்லையென்றால் சொத்துக்களால் பயனில்லை என்பது கூறப்பட்டது.




10. அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு.

அன்பின் வழிப்பட்ட ஜீவன் இருக்கும் உடலே உயிரோடு இருப்பதாகும். (மனதில்) அந்த அன்பு இல்லாதவரின் உடலானது தோலால் மூடப்பட்ட எலும்புக் கூடு போல் (ஜடமானது) ஆகும்.

அன்பும் அறனும் இல்லாத பிறவியே வீணானது.

இந்நான்கு பாட்டாலும் அன்பில்லாதவிடத்தில் உண்டாகும் குற்றம் சொல்லப்பட்டது.



ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித் - தீதற்றோர்
உள்ளுதொ றுள்ளுதொ றுள்ளம் உருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு.

(மாங்குடி மருதனார்)

1. Youtube Channels:

   Swami Omkarananda

   Vedapuri Events

   Swami Purnananda Tamil



2. Instagram - swami om karananda

3. Facebook - Swami omkarananda

4. Facebook Group - Theni Swami Chidbhavananda Ashramam

5. Whatsapp Channel - Theni Swami Chidbhavananda Ashramam

94430 51910 www.vedaneri.org vedapuricamps@gmail.com